நயினை

# நாகபூஷணி அம்பாள் பவனிவரும் புதிய பொற்தேர்க் கீர்த்தனை

ஆசிரியர்
**புரட்சிக் கவிஞன், செல்வராஜன்**
ஊர்காவற்றுறை.

பதிப்பாசிரியர்
**திரு ஏ. பாலகெங்காதரன்**
காளிகோயிலடி,
கரம்பொன்,
ஊர்காவற்றுறை.
5-7-57

# சமர்ப்பணம்

எனது ஆத்ம நண்பரும், விவேகானந்த அச்சக அதிபரும், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் தேர்த்திருப்பணிச் சபைக் கௌரவக் காரியதரிசியுமாயிருந்து, ஆத்மீக சேவைக்காகத் தமது உடல்பொருளாவி மூன்றையும் அர்ப்பணித்து 26-3-57-ல் சென்னையில் சிவபதமடைந்த உயர் **திரு. வே. சுந்தரம்பிள்ளை அவர்களின்** பூசித திருப்பணிக்கே இச் சிறு நூலைச் சமர்ப்பணம் செய்கிறோம்.

**ஆசிரியர்.**

## காப்பு

தேடித் திருநயினைத் தேவிநாகம்மாளைப்
பாடித் துதித்துப் பயனடைய — கூடியநந்
நம்பிக்கை கொண்டே நவின்றேன்தேர்க் கீர்த்தனையை
தும்பிக்கை யானே துணை,

# கும்மி

வாருங்கள் வாருங்கள் பக்தர்களே—தாயை
வணங்கி வாழ்த்தித் துதித்திடுவோம்
சேருங்கள் சேருங்கள் பக்தர்களே—ஒன்று
சேர்ந்து பொற்தேரை யிழுத்திடுவோம்

கூடியே ஒன்றாக நின்றிடுவோம்—கரம்
கூப்பி அம்பாளை மன்றாடிடுவோம்
பாடி மகிழ்ந்து கொண்டாடி அனைவரும்
பக்தியாய்த் தேரை யிழுத்திடுவோம்

அம்பாளின் செம்பாதம் கிட்டிடுவோம்—பன
தன்பாகத் தேர்வடந் தொட்டிடுவோம்
நம்பாலுறும் பவவெப்பிணி தீர—நம்
நாயகித்தேரை யிழுத்திடுவோம்

வார்முரசங்கள் அடித்திடுவோம்—தாயை
வாழ்த்திச் சங்கீதம் படித்திடுவோம்
ஊர்முழுதுங்கூடி எங்கள் நாகேஸ்வரி
ஊர்ந்திடுந் தேரை யிழுத்திடுவோம்

ஆலவட்டங்க ளெடுத்திடுவோம்—எம
தன்பான நெஞ்சைக் கொடுத்திடுவோம்
கோலமுடனிளம் வாலவயோதிபர்
கூடியே தேரை யிழுத்திடுவோம்

வெண்சாமரைகொண்டு வீசிடுவோம்—எங்கள்
வேதனையைத் தாய்க்குப் பேசிடுவோம்
எண்சாணுடம்பு இருக்குமட்டுந் தாயார்
ஏறிடுந்தேரை யிழுத்திடுவோம்

பன்னிறப்பூமாலை சூட்டிடுவோம்—பய
பக்தி வைராக்கியம் காட்டிடுவோம்
பொன்னிறமாக யிலங்கித் துலங்கும்
புதிய பொற்தேரை யிழுத்திடுவோம்

சந்தணங் குங்குமஞ் சாற்றிடுவோம்—நறுஞ்
சவ்வாது பன்னீரை ஊற்றிடுவோம்
பந்துசன ரொருமித்து வந்தேகூடிப்
பற்றியே தேரை யிழுத்திடுவோம்

கற்பூரத் தீபங்கள் காட்டிடுவோம்—இரு
கையைநீட்டி அருள் கேட்டிடுவோம்
அற்புதமாக இவ்வாண்டிலமைத்திட்ட
ஆணிப் பொற்தேரை யிழுத்திடுவோம்

காணிக்கை நேர்த்தி கொடுத்திடுவோம்—செடில்
காவடி தோளி லெடுத்திடுவோம்
தோணித்துறைதங்கும் நாகம்மாள் தோன்றிடுந்
தூய பொற்தேரை யிழுத்திடுவோம்

## கண்ணிகள்

(சின்னஞ்சிறு கிளியே எ. மெ.)

செம்பொன் தேரேறிவரும்—நாகம்மா
சேயரைப் பாருமம்மா
அம்பொற் கரத்தாலே—அருளினை
அள்ளி நீ தாருமம்மா

நித்ய தவங்கிடந்தே—நாகம்மா
நீலக்கடல் கடந்தே
பக்தியாய் வந்தோமம்மா—உன்னருளைப்
பாலிக்க வேண்டுமம்மா

நாகம் குடை பிடிக்க—நாகம்மா
நானில மாள்பவளே
தாகத்தோடுன் பதிக்கே—வந்தவரைத்
தற்காக்க வேண்டுமம்மா

குஞ்சரனை யணைத்தே—நாகம்மா
கொஞ்சி முத்தாடுதல் போல்
வஞ்சமில்லா தெமக்கும்—முத்தங்களை
வற்ருமல் தந்திடம்மா

காங்கேயனை யிடுக்கி—நாகம்மா
கக்கத்தி லேந்துதல் போல்
ஏங்கி அழும் எம்மையும்—இருகையால்
ஏந்தி அணையுமம்மா

காலடியே தொழுதே—நாகம்மா
கண்ணீர் வடித்தழுதே
பாலர்கள் வந்தோமம்மா—உன்னருளில்
பங்கொன்று தாருமம்மா

தாமரை நீர்த்துளிபோல்—நாகம்மா
தத்தளித்தே வாடுறோம்
தாமதமின்றி உந்தன்—தண்முகத்தைத்
தட்டாமல் காட்டுமம்மா

பற்றுக்கள் விட்டொழித்து—நாகம்மா
பக்தியிலே களித்து
முற்றுந் துறவு பூண—உன்னருளை
முற்றாகத் தந்திடம்மா

செந்நெல் கன்னல் செழிக்க—நாகம்மா
சிந்தையெல்லாங் களிக்க
மின்னும் ஒளிப்பார்வையை—ஒருமுறை
மேதினி காட்டுமம்மா

கன்னித் தமிழரசு—நாகம்மா
கண்டே வெற்றி முரசு
சென்னி நிமிர்ந்தடிக்க—உன்னருளைச்
செய்விக்க வேண்டுமம்மா

———

(வெற்றி எட்டுத்திக்கும் எ. மெ.)

**பல்லவி**

தேவி மணித்தேரிலேறி வீதியேவாருள்
வீதியே வாருள் எங்குஞ் சோதியே
தாருள்—தேவி

**சரணம்**

(1)

ஆவலாகப் பக்த ரரோகரஞ் சொல்ல
ஆடுநாக பாம்பின்மீதி லாசனங்கொள்ள
—தேவி

(2)

தும்பிக்கையுடையான் துணையாகவே
முன்னும்
தோகைமயில் வேல்முருகன் தோன்றவே
பின்னும்—தேவி

(3)

அண்டர் அடியார்களன்பர் தெண்டம்
புரிய
அம்பிகை வாருளருளை அள்ளிச் சொரிய
—தேவி

(4)

ஆலவட்டஞ் சாமரைகள் அன்பர்கள்வீச
அடியார்க ளண்டித் தங்கள் ஆகுலம்பேச
—தேவி

(5)

காவடிகளாடித்திருச் சேவடி சூழ
கட்டுமணித் தேரில் வாருள் காசினி ஆள
—தேவி

## கீர்த்தனை

(தாமரை பூத்த தடாகத்திலே எ. மெ.)

பல்லவி

நாகம்மை பாதத்தை நாடுமடா—அது
நமக்கின்ப மோட்ச வீடுமடா—நயினை
நாகம்மை

அநுபல்லவி

சாகரஞ்சூழ் புண்யத்தலமிதடா—மனச்
சாந்திபெறுந் தீர்த்தக் குளமிதடா—
நயினைநாகம்மை

சரணம்

வேகும்மனத் துயரம் விலகுமடா
விரும்பும் ஞானப்பயிர்கள் விளையுமடா
சாகும்வரைச் சலுகை தருவாளடா—மறு
சன்மத்திற்கும் அருளைப் பெறலாமடா—
நயினைநாகம்மை

மாயப்ரபஞ்சவாழ்வை மறந்திடடா
மறந்து தூயமனத்தில் சிறந்திடடா
சேய் மனைவி பற்றுத் துறந்திடடா—
இந்த
செகத்தி லித்தலத் தென்றும்
இருந்திடடா—நயினைநாகம்மை

(கிராத விளையாட்டு எ. மெ.)

**பல்லவி**

தரவேண்டுந் தரவேண்டுமம்மா—உந்தன்
தயவிலே ஒருபங்கு நயினை நாகம்மா
—தர

**சரணங்கள்**

1

அரவப்பொற் கொடியின்கீழ்வாரும்
உந்தன்
அருட்தேனில் அடியார்க்கு ஒருசொட்டுத்
தாரும்—தர

2

உனையன்றி எமக்கன்னை யாரு—அந்த
உரிமைகொண்டே வந்துற்றோம் முகம்
பாரு—தர

3

பசிபஞ்சம் மனவஞ்சம் ஓட்டு—உந்தன்
பகையற்ற தயை நெஞ்சமதில் கொஞ்சங்
காட்டு—தர

4

வாசல் வந்தாரைத் தள்ளாதே—அமுத
வாயால்வரந்தரேன் என்றேசொல்லாதே
—தர

5

வரம்வாங்கா துணைவிட்டு நீங்கோம்
—உந்தன்
வஞ்சத்தை எம்மீது வைத்தல் நாம்
தாங்கோம்—தர

6

எங்குற்றந்தீர்க்க யார்வல்லார்—எம்மை
ஈன்றவள் நீயன்றி யாருண்டு நல்லாள்
—தர

## வேண்டுதல்

*எண்சீர் விருத்தம்*

1

அம்மாளே உன்பாதம் அண்டி வந்தோம்
ஆவியுடல் பொருளனைத்தும் அன்பாய்த் தந்தோம்
எம்மாளே இடுக்கணினு லிதயம் நொந்தோம்
இனியுனைநா மொருபொழுது மிறஞ்சப் பிந்தோம்
செம்மான்கைக் கொண்டசிவன் தேவி யாரே
செய்பிழைகள் பொறுத்தின்றுன் னருட்க டாட்சம்
நம்மானு ரனைவருக்கும் நல்க வேண்டும்
நாயகியே நயினைநகர் நாகம் மாளே.

2

பஞ்சத்தால் பசிப்பிணியால் பவநோக் காட்டால்
படுந்துயர மினித்தாங்க முடியா தம்மா
நெஞ்சந்தா னெத்தனைநாள் பொறுத் திருக்கும்
நீயறியா வித்தையதோ நினைத்துப் பாராய்
வஞ்சந்தான் காட்டாமல் வரங்க ளெல்லாம்
வற்றுமல் வாரியிறைத் திடுவா யின்றே
நஞ்சுந்தான் உள்ளரவக் குடைக்கீழ் வாழும்
நாயகியே நயினைநகர் நாகம் மாளே.

3

பாவியரெம் முகம்பாரா திருந்தி டாதே
படக்குடைக்கீ ழரவணைக்கத் தயங்கி டாதே
ஆவியுடல் அடியவர்க்கே யிருக்கு மட்டுன்
அருட்பார்வை செலுத்தாம லயர்ந்தி டாதே

கூவியுன தடிதொழுது கும்பிட் டார்க்கும்
கூலிகொடுத் திடுவதிலுங் குறைத்தி டாதே
நாவியுடைத் தலையரவக் குடைக்கீழ் வாழும்
நாயகியே நயினைநகர் நாகம் மாளே.

4

முத்தான வாய்திறந்து ஒருநல் வார்த்தை
மொழிந்திடவே எம்மிடிமை முற்றாய்த் தீரும்
கொத்தான நகைக்கரங்கொண் டரவ ணைத்தால்
குறைபாத செல்வமெலாம் கூடிச் சேரும்
இத்தாதி வரமுடைய எமது தாயே
ஏழைகளுக் கள்ளிவெகு மானந் தாரும்
நத்தாத பாவிகட்கும் நலங்கள் கூரும்
நாயகியே நயினைநகர் நாகம் மாளே.

5

பெற்றவளாய் நீயிருக்க உனது நேசப்
பிள்ளைகள்செய் பிழைபொறுக்க வேறு ருண்டு
மற்றவரார் தலையிடுவார் தலையிட் டாலும்
மதிப்புண்டோ மக்களுக்கும் மான முண்டோ
பற்றுதலா யரவணையும் பவங்கள் தீரும்
பவம்தீர்த்தெம் பங்குகளைப் பகிர்ந்து தாரும்
நற்றயவாய் பொட்டரவக் குடைக்கீழ்ச் சேரும்
நாயகியே நயினைநகர் நாகம் மாளே.

## வாழி விருத்தம்

சீராருஞ் சைவமறை செழித்து வாழி
  சிந்தைகளில் சிவநேசம் சிறந்து வாழி
ஏராரும் பல்வளமு மிலங்கி வாழி!
  எழில்மடவார் கற்பிலென்று மிருந்து வாழி!
பேராருஞ் செந்தமிழும் பெருகி வாழி!
  பெருமையுடன் தமிழரசும் பெற்றே வாழி!
நேராரும் நயினைநகர் நாகம் மாளின்
  நிறைவருளைப் பெற்றென்றும் வாழி! வாழி!!

சுபம்! சுபம்!!! சுபம்!!!